இராவண காவிய
நிறைவு விழாப் பேருரை

முத்தமிழறிஞர்

கலைஞர். மு. கருணாநிதி




பாவேந்தர் இலக்கியப் பேரவை,
நாமக்கல்.

இராவண காவிய
நிறைவு விழாப் பேருரை

அன்பளிப்பு

பாவேந்தர் இலக்கியப் பேரவை
நாமக்கல்.

முத்தமிழறிஞர்
கலைஞர் மு. கருணாநிதி



பாவேந்தர் இலக்கியப் பேரவை
நாமக்கல்.

பதிப்பு : தி. பி. 2026 சித்திரை (ஏப்ரல், 1995)

உரிமை : பாவேந்தர் இலக்கியப் பேரவை,
நாமக்கல்.

விலை : ரூ. 10 - 00

12425
க 894.8115 ம

நூல் கிடைக்குமிடங்கள்

புலவர். ப. கம்பன்னன், எம். ஏ., எம். எட்.,
தலைவர், பாவேந்தர் இலக்கியப்பேரவை ல.உ.சி. நகர்,
கொசவம்பட்டி, நாமக்கல் - 637 002.

புலவர். மு. கந்தசாமி எம்.ஏ., பி. எட்.,
செயலர், பொருளர் பாவேந்தர் இலக்கியப் பேரவை,
பத்திரகாளி தெரு,
ச. பே. புதூர், நாமக்கல் - 637 002.

அச்சிட்டோர் : தமிழன் கம்ப்யூட்டர் ஆப்செட், பிரிண்டர்ஸ், நாமக்கல்.



புலவர் குழந்தை அவர்கள்

1-7-1906 25-9-1972




புலவர் சுப்பண்ணனுக்குக் கலைஞர் பொன்னாடை அணிவிக்கின்றார் அருகில் சிலம்பொலியார்



கலைஞர் உரையாற்றுகிறார் அருகில் செயலர் புலவர் மு. கந்தசாமி, துணைச்செயலர் சி. மணிமாறன்



மு. தமிழ்க்குடிமகன், வீரபாண்டியார், புலவர் ப. சுப்பண்ணன், புலவர் மு. கந்தசாமி



‘‘செந்தமிழே உயிரே

நறுந்தேனே

செயலினை மூச்சினை

உனக்களித்தேனே!’’

முன்னுரை

வீழ்ச்சியுறு தமிழகம், தமிழ் மொழி எழுச்சி பெறவேண்டு என்று, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன் வழியில் அயராது இலக்கியப் பணி செய்து வருகிறது எங்கள் பேரவை.

பாவேந்தர் இலக்கியப் பேரவையை நாமக்கல்லில் 5–4–92இல் தொடங்கி இனமானப் பேராசிரியர் க. அன்பழகனார் அவர்களை அழைத்துப் பாவேந்தர் விழாவினை நடத்திப்பெருமை கொண்டோம்.

அடுத்து, எந்தமிழன் செந்தமிழ்க்காக வாழ்ந்த இராவணன் பெருஞ்சீர் இனிது பேசும் செந்தமிழின் பூங்காவாம் இராவணகாவியம், அக்காவியத்திற்கு விழா எடுக்க விரும்பித் தமிழகத்தின், ஈடுஇணையற்ற இலக்கிய அறிஞர் கலைஞர் அவர்களை அழைத்தோம் அவர்களும் மனமுவந்து வந்து விழாவில் கலந்து கொண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க விழாப் பேருரையினை நிகழ்த்தி சிறப்புச்செய்தார்.

இராவணகாவியம் நாடெங்கும் பரவிடவேண்டும் என்னும் சீரிய நோக்கோடு கலைஞர் ஆற்றிய பேருரையினை நூலாக வெளியிடுகிறோம்.

தாம் ஆற்றிய உரையினை வெளியிட மனமுவந்து அனுமதியளித்த கலைஞர் அவர்கட்கும் விழாவில் பங்குகொண்ட தமிழ்ச் சன்றோர்களுக்கும் விரைவில் அச்சிட்டு வழங்கிய தமிழன் கணிப்பொறிஅச்சகஉரிமையாளர், இனிய நண்பர் திரு. கி. நாகராசன் அவர்களுக்கும் உற்றுழி உதவிய அனைவருக்கும் பேரவையின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூல், இராமாயணம் பற்றிய தெளிவான சிந்தனையை நாட்டு மக்களுக்கு உணர்த்தும் என்று நம்புகிறோம்.

இங்ஙனம்,
பாவேந்தர் இலக்கியப் பேரவை,
நாமக்கல்.

☎ 451009, 451924

திராவிட முன்னேற்றக் கழகம்

(தலைமை நிலையம்)

தலைவர் :

கலைஞர் மு. கருணாநிதி

"அண்ணா அறிவாலயம்"
268–269, அண்ணா சாலை,
சென்னை. 600 018

பெறுநர்.

புலவர். ப. சுப்பண்ணன், எம்.ஏ., எம். எட்.,
தலைவர் பாவேந்தர் இலக்கியப் பேரவை
வ.உ.சி. நகர், கொசவம்பட்டி
நாமக்கல். 637 002.

அன்புடையீர்,

வணக்கம். தங்களது 28–11–94 தேதியிட்ட கடிதத்தைத் தலைவர் கலைஞர் அவர்கள் பார்த்தார். மகிழ்ச்சியடைந்தார். இராவண காவிய நிறைவு விழாச் சொற்பொழிவு உரை 5–5–94 தேதி முரசொலி இதழில் வந்துள்ளது. அந்த உரைக்கு அனுமதி அளித்து அதைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார்.

நன்றி, வணக்கம்.

அன்புள்ள,
(குணசேகரன்)
கலைஞர் அவர்களின் உதவியாளர்.

பாவேந்தர் இலக்கியப் பேரவை

நாமக்கல்.

இராவணகாவிய நிறைவு விழாப்பேருரை

நாள் 30-4-1994.

முத்தமிழறிஞர்

கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்.

சிலப்பதிகாரத் தெளிவுரை நூல் வெளியிடும் நிகழ்ச்சியும் – இராவண காவிய நிறைவுவிழா நிகழ்ச்சியும் இணைக்கப்பெற்று இதில் கலந்து கொள்கின்ற நல்ல வாய்ப்பினை எனக்கு வழங்கியுள்ள பாவேந்தர் இலக்கியப் பேரவையின் நண்பர்களுக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராவண காவியம் என்றாலே தடை இருக்கும் என்பதற்கேற்ப முதலில் நாம் இந்த விழாவை நடத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இடம் மழையின் காரணமாகத் தடைபட்டு; **தடைக்கற்கள் உண்டென்றாலும் தடந்தோள் உண்டென்று** பாடிய பாரதிதாசனுடைய கவிதைக்கேற்ப மழை வெளியே பெய்தாலும் மண்டபம் உண்டு என்ற நிலையிலே (பலத்த கைதட்டல்) இராவணகாவியம் விழாவை நாம் இங்கே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்

இந்த விழாவில் நமது அன்புக்கும் பாசத்துக்கும் உரிய – மறைந்தும் மறையாத புலவர் ஏறு குழந்தை அவர்களின். மகளார் சமத்துவம்அவர்களுக்குப் பாராட்டும் வாழ்த்தும் கூறுகின்ற வாய்ப்பு எனக்குக் கிட்டியமைக்காக இந்த இலக்கியப் பேரவைக்கு மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இராவண காவியம் தடை கழக ஆட்சியில் நீக்கப்பட்டது!

புலவர் குழந்தை அவர்கள் எழுதி, முன்பிருந்த அரசினால் தடைசெய்யப்பட்டுப் பிறகு 71 ஆம் ஆண்டில் தி.மு.கழக ஆட்சி மீண்டும் மலர்ந்து அந்த அரசின் தலைமைப் பொறுப்பை நான் ஏற்றிருந்தநேரத்தில்' இராவணகாவியம்' மீது விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது.

இங்கே தலைமை உரை ஆற்றிய **'புலவர் சுப்பண்ணன் அவர்கள்'** சிலகுறைபாடுகளை மன வேதனையோடு தெரிவித்துக் கொண்டார். ஒரு வேளை அது மழையில் கரைந்திருக்கும், கருணாநிதி கவனித் திருக்கமாட்டார் என்று அவர் எண்ணியிருக்கக்கூடும் நான்அந்த மழையிலும் இடி ஒலியிலும் கூட அதைக் கேட்கத் தவறவில்லை.

"கலைஞர்.அவர்களுக்கு இளமையில் இருந்த கொள்கை வேகம் இப்போது இல்லை" என்று ஒரு குற்றச்சாட்டு "இப்போது மெத்தனமாக மெதுவாகச் செயல்படுகிறார்" என்று ஒருகுற்றச்சாட்டு. இளமையில் இருக்கும் வேகம் முதுமையில் இருக்காது என்பதை நான் ஒத்துக்கொண்டால் இன்றைக்கு நாட்டில்நடைபெறுகின்ற ஒரு பெரிய விவாதத்துக்கு நானே மறைமுகமாக ஆதரவு தந்தவனாக ஆகிவிடுவேன். எனவே நான் அஃதை ஒத்துக் கொள்ளத் தயாராக இல்லை.

எனக்கு முன்பிருந்த வேகம் என்பது – எனக்கு மாத்திரமன்று; இந்தஇயக்கத்திற்கே முன்பிருந்த வேகம் என்பது தீக்குச்சி– தீப்பெட்டியிலே உராய்வதைப் போன்ற வேகம் தீக்குச்சி தீப் பெட்டியில் உராயும்போது திடீரென்று ஒளி உமிழும். பிறகு நல்ல திரி அமைந்த

விளக்கைக் கொழுத்தி விட்டால் விளக்கு நின்று எரிந்து கொண்டிருக்கும்.

இப்போது இருப்பது ஒளி தரும் விளக்கின் வேகம்!

முன்பிருந்தது – தீக்குச்சியின் வேகம்; இப்போது இருப்பது ஒளிதருகின்ற விளக்கின் வேகம் என்பதை நான் – நண்பர் சுப்பண்ணனுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீக்குச்சியினுடைய ஒளி கையில் வைத்துக் கொண்டிருந்தால் – அது தானாக அணைந்துவிடும். அதை விளக்கின் திரியிலே பயன்படுத்தினால் – அது நின்று எரிந்துகொண்டிருக்கும்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் எண்ணமே – திடீரென்று எரிந்துநின்றுவிடுவதா? அல்லது என்றைக்கும் ஒளி தருகின்ற வகையில்எரிந்து கொண்டிருப்பதா? என்பதுதான்.

தீக்குச்சிக்கும் விளக்குக்கும் உள்ள வேறுபாட்டைச் சொல்கிற நேரத்தில் விளக்கு எரிவதற்கு எப்படி நெருப்புத் தேவையோ அந்தத் தேவையை – அதாவது அடிப்படையை நாங்கள் என்றும் மறந்து விட்டவர்கள் அல்லர்.

தந்தை பெரியாரின் அடிப்படைக் கொள்கைகளை வைத்துத்தான் நான் இன்றைக்குத் தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கின்ற இயக்கம் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நண்பர் சுப்பண்ணன் அவர்களுக்கும் அவரைப்போன்ற எண்ணம் கொண்டவர்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அண்ணா கற்றுக் கொடுத்த கொள்கை!

ஒன்றை உறுதியாகச் சொல்வேன் – எந்தவொரு கொள்கையையும் மற்றவர்கள் மீது திணிப்பதை நான் விரும்புவதில்லை. திணித்தல் கூடாது. ஒரு மொழியையே நம்மீது திணிக்கக்கூடாது என்று போராடிக் கொண்டிருக்கும்போது ஒரு கொள்கையை இன்னொருவர் உள்ளத்தில் திணிப்பது தவறு என்பது என்னுடைய கருத்து. அதைத்தான் அண்ணா அவர்கள் கற்றுக் கொடுத்திருக்கிறார்.

எனவே யாரையும் புண்படுத்தாமல் அதே நேரத்தில் அவர்களுடைய உள்ளத்தைப் பண்படுத்துகிற அளவுக்கு நம்முடைய பணி தொடர வேண்டும் . என்பதிலே எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. அது வேகமாக நடைபெற முடியாது என்று யாராவது கருதுவார் களேயானால் – வேகமாக நடைபெறாவிட்டாலும் மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக நடைபெறக்கூடிய முயற்சிகளில் நானும் ஈடுபடுவேன்; நான் சார்ந்திருக்கிற இயக்கத்தாரும் ஈடுபடுவார்கள் என்ற உறுதியை இராவண காவியம் விழாவில் நண்பர் சுப்பண்ணன் போன்றவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புலவர் குழந்தைக்குக் கிடைத்த பாராட்டு!

இராவணகாவியத்தை இயற்றிய புலவர் குழந்தை அவர்களைப் பலர் தாக்கிப் பேசினாலும் பலர் எதிர்த்துப் பேசினாலும் அஃது ஒரு காவியமா? என்று சீறிப் பாய்ந்தாலும்கூட இங்கே தமிழ்க்குடி மகன் அவர்களும், சிந்தனைச்செல்வர் சிலம்பொலி செல்லப்பன் அவர்களும் எடுத்துக்காட்டியது போலப் புலவர் குழந்தை அவர்களை அன்றைக்குப் பாராட்டத் தவறினாலும் கூட எதிர்க்கத் தவறாத காலகட்டத்தில் தான் ரா. பி. சேதுப்பிள்ளை பாராட்டி இருக்கின்றார். சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை யார்? என்ற பின்னணியை உணர்ந்தால் தான் அந்தப் பாராட்டின் பெருமை நமக்குத் தெளிவாகப் புலப்படும்.

கம்பராமாயணத்தைக் கொளுத்த வேண்டும் என்று தந்தைபெரியார் அவர்கள் அறிக்கை தந்து; நாடெல்லாம் கொந்தளிப்பும் குமுறலும் ஏற்பட்ட கால கட்டத்தில் பெரியார் விடுத்த அறிக்கை சரிதானா; இல்லையா? என்பது விவாதப் பொருளாக ஆன காலகட்டத்தில் **" தீ பரவட்டும்"** என்ற நூல் வெளிவந்தது. அந்தநூலின் பொருளடக்கம் என்னவென்றால் பேரறிஞர் அண்ணாஅவர்கள் ஒரு நாள் நாவலர் சோமசுந்தர பாரதியாரோடும், மற்றொரு நாள் சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை யோடும் நடத்திய சொற்போராட்டத்தின் தொகுப்புத் தான் **"தீ பரவட்டும்"** என்கின்ற அந்த நூலாகும்.

இருவருமே கம்பராமாயணத்தைக் கடவுள் காதை என்று ஒத்துக்கொள்ளாமல் அது கற்பனையாக இருந்தாலும் கூட அழகான தமிழில்அருமையான உவமைகளோடு தமிழருவியாகக் கம்பன் தந்த இலக்கியத்தைக் கொளுத்தலாமா? என்று தான் கேட்டார்களே தவிர, இராமன் என்ற கடவுள் அவதாரத்தைப் பற்றிய நூலைக்கொளுத்தலாமா? என்று சோமசுந்தர பாரதியாரும் கேட்கவில்லை. ரா. பி. சேதுப்பிள்ளை யும் கேட்கவில்லை எனினும், கம்பரா மாயணத்தைக் கொளுத்தக்கூடாது என்ற வரிசையில் நின்று அன்று அண்ணா அவர்களிடத்தில் சொற்போரிட்டவர் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை.

கம்பனுக்கு இணையான இன்னொரு புலவர்!

அந்த அளவுக்கு அவர் கம்பராமாயணத்தில் ஈடுபாடு கொண்டவர். இதயத்தைக் கம்பனிடத்தில் ஒப்படைத்தவர். அவர் புலவர் குழந்தை எழுதிய இராவணகாவியத்தை வெறுத்தாரா? என்றால் இல்லை. இராவணகாவியம் பற்றிப் புலவர் குழந்தைக்கு அவர், எழுதிய கவிதையைத்தான் நான் இங்கு எடுத்துக் காட்டவிரும்புகிறேன்.

"தேனினு மினிய செந்தமிழ்க் குழந்தை!
நான் கம்பராமாயணச் சுவையில்
கட்டுண்டு கிடந்தனன். தங்கள் இராவண

காவியம் அக்கட்டை அவிழ்த்து விட்டது.
கருத்து மாறுபாடு வேறு "
–என்று எழுதியிருக்கிறார் சேதுப்பிள்ளை.

"நீங்கள் எழுதிய இராவண காவியத்தில் கருத்து மாறுபாடு இருந்தாலும் கூடக் கம்பனைத் தவிர வேறு கவிஞன் இல்லையென்று அந்த இலக்கியச் சுவையில் கட்டுண்டு கிடந்தேன்; நீங்கள் அந்தக் கட்டை இப்போது அவிழ்த்து விட்டீர்கள்" என்று சேதுப்பிள்ளை சொல்லியிருக்கிறார் என்றால் கம்பனுக்கு இணையாக இன்னொரு புலவர் குழந்தை தோன்றிருக்கிறார் என்று சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளையே ஒத்துக்கொண்டிருக்கிறார்.

அதைப்போலத்தான் ஐயம்பெருமாள் கோனார் அவர்களும் பெரும் தமிழறிஞர். அவர் சொல்லுகிறார்;

"இனியொரு கம்பனும் வருவானோ?
இப்படியும் கவி தருவானோ?
கம்பனே வந்தான்; அப்படிக் கவிதையும் தந்தான்
ஆனால், கருத்துத்தான் மாறுபட்டது"

கருத்து மாறுபட்டது என்று சொல்கிறார்களேயல்லாமல் கவிதை இனிமையானதன்று அதில் தமிழில்லை; தமிழ்ச் சுவையில்லை என்று யாரும் பாடிட முன்வரவில்லை.

அதைப்போலப் பிரபல நாவலாசிரியர் நாரண துரைக் கண்ணன் கம்பனிடத்தில் மிகுந்த அன்பு கொண்டவர் அவர் எழுதினார் இராவணகாவியத்தைப் பற்றி –

"தமிழிலக்கியத்தின் அணிகலனாய் இருக்கத்தக்க அருமையான காவிய நூல் – இராவண காவியம்" என்று!

'தமிழின்பால் பற்றுதலை வைத்த நம் பாட்டன்'

சிந்தனைச் செல்வர் சிலம்பொலி செல்லப்பன் ஒன்றைச் சொன்னார். நான் தென்னிலங்கை வேந்தனைப் பற்றித் "தென்னவன் காதை" என்ற ஒருகவிதை எழுதியிருப்பதைக் குறிப்பிட்டார். அதிலே ஒரு வரியையும் அவர் குறிப்பிட்டார்.

"தமிழின் பால் பற்றுதல் வைத்த நம் பாட்டன்"

–என்று நான் எழுதியிருப்பதாகச் சொன்னார்.

அதிலே ஒரு சிறு திருத்தம்.

"பற்றுதல் வைத்த பாட்டன்" என்று நான் சொல்ல வில்லை.

"தமிழின்பால் பற்றுதலை வைத்த நம் பாட்டன்"

–என்று எழுதிருக்கிறேன். 'பற்றுதலை' என்று ஏன் எழுதியிருக்கிறேன் என்றால் இராவணனுக்குப் பத்துத் தலை; என்று சொல்கிறார்களே; அந்த ப் பத்துத் தலை அல்ல; தமிழின்பால் 'பற்றுதலை' வைத்த நம் பாட்டன் என்று 'தென்னவன் காதையில்' நான் எழுதியிருக்கிறேன்.

பாவேந்தர் இலக்கியப் பேரவையின் விழா என்ற காரணத் தால் புரட்சிக் கவிஞர் பாரதி தாசனை நினைவூட்டுவது என் கடமை. இங்கே வரவேற்புரையில் கூட அதைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

இராவணனைப் பற்றிப் புரட்சிக்கவிஞர் பாடினார் –

"தென்திசையைப் பார்க்கின்றேன் என் சொல்வேன் என்றன்
சிந்தையெலாம் தோள்களெலாம் பூரிக்கு தடடா!
அன்றந்த இலங்கையினை ஆண்ட மறத் தமிழன்
ஐயிரண்டு திசைமுகத்தும் தன் புகழை வைத்தோன்
குன்றெடுக்கும் பெருந்தோளான்; கொடை கொடுக்கும் கையான்

குள்ளநரிச் செயல் செய்யும் கூட்டத்தின் கூற்றம் என்றமிழர் மூதாதை என்றமிழர் பெருமான் இராவணன் காண்! அவன் நாமம் இவ்வுலகம் அறியும் வஞ்சக விபீடணனின் அண்ணனென்று தன்னை வையத்தார் சொல்லுமொரு மாபழிக்கே அஞ்சும் நெஞ்சகன்"

என்று பாடியிருக்கிறார் புரட்சிக் கவிஞர் இராவணன் எதற்கும் பயப்படமாட்டான். எந்த எதிரிக்கும் அஞ்ச மாட்டான். எந்தகணை களுக்கும் பயப்படமாட்டான். எந்த வில்லுக்கும் பயப்படமாட்டான். ஆனால்எதற்குப் பயந்தான்? விபீடணனின் அண்ணன் என்று – துரோகியின் அண்ணன் என்று என்னை இந்த உலகம் சொல்லுகிறதே என்ற அந்தப் பழிக்கு மட்டும்தான் இராவணன் அஞ்சினான் என்று புரட்சிக்கவிஞர் பாடியிருக்கிறார். (பலத்த கைதட்டல்)

அந்த இராவணனைக் கதாநாயகனாக ஆக்கி–அந்த இராவணன் மறத்தமிழன் என்பதை இந்த மாநிலத்திற்கு எடுத்துக் காட்டுகிறவகையில் அவன் வீரம் செறிந்தவன் – விவேகம் நிறைந்தவன் அருளாளன் – அறநெறியில் தேர்ந்தவன் என்பதை யெல்லாம் எடுத்துக்காட்டுகிற வகையிலே தான் புலவர் குழந்தை அவர்கள் இராவணகாவியம் செய்தார்.

ஏதோ; புலவர் குழந்தை புதிதாக இராமாயணத்துக்கு மாறாக இன்னொரு காவியத்தைச் செய்து விட்டார் என்று யாராவது புலவர். பெருமக்கள் கருதுவார்களேயானால் அவர்களுக்கு நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கம்பராமாயணம் மூலநூல் அன்று. அதுமாத்திரமன்றி மூலநூல் என்று சொல்லப்படுகிற வால்மீகி இராமாயணம் தன்னோடு தனதுகதையை முடித்துக் கொண்ட நூல் அன்று. அதைத் தொடர்ந்தும் அதற்கு முன்பும் எத்தனையோ இராமாயணங்கள் வந்திருக்கின்றன.வால்மீகி இராமாயணம் கிறிஸ்து பிறப்பதற்கு முன் கி.மு.மூன்றாம்நூற்றாண்டு அல்லது நான்காவது நூற்றாண்டில் தான் எழுதப்பட்டிருக்கிறது

கி.பி.எட்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது "வசிஷ்டராமாயணம்". கி.பி. நான்காவது நூற்றாண்டில் காளிதாசர் "இரகுவம்சம்" என்ற இராமாயணத்தை இயற்றினார். கி.பி. ஆறாம்நூற்றாண்டில் பிரவரசேனர் "இராவணவகோ" என்ற இராமாயணத்தை எழுதினார். அதற்குப் பிறகு பட்டி என்பவர் "இராவணவதா" என்ற இராமாயணத்தை எழுதினார்.

வான்மீகிக்கு முன்பே கி.மு.ஐந்தாம் நூற்றாண்டில் பாலிமொழியில் பௌத்த இராமாயணங்கள் இயற்றப்பட்டன. கி.பி.நான் காம் நூற்றாண்டு முதல் பதினோராம் நூற்றாண்டு வரை பிராகிருதமொழியில் – சமஸ்கிருத மொழியில் ஜைன இராமாயணம் இயற்றப்பட்டது. இதற்கெல்லாம் பிறகுதான் கி.பி. ஒன்பதாம்நூற்றாண்டில் கம்பராமாயணம் இயற்றப்பட்டது.

தமிழில் கம்பராமாயணம் வந்தபிறகு கி.பி. 13ஆம் நூற்றாண்டிலிருந்து 15ஆம் நூற்றாண்டுக்குள் தெலுங்கில் அரங்கநாத இராமாயணம், பாஸ்கர இராமாயணம், மொல்ல இராமாயணம் வந்தன.

கன்னட மொழியில் பம்பராமாயணம், தொரவே இராமாயணம் இவை வந்த காலம் கி.பி. 11 முதல் 16 ஆம் நூற்றாண்டு.

மலையாள மொழியில் கன்னச இராமாயணம் கி.பி.14ஆம் நூற்றாண்டிலும், கி.பி. 16ஆம் நூற்றாண்டில் அத்யாத்மராமாயணமும் வந்தன.

கி.பி. 16ஆம் நூற்றாண்டில் இந்தியில் துளசி தாஸ் இராமாயணமும், இராமசந்திரிகாவும் வந்தன.

அதைத் தொடர்ந்து அசாமி இராமாயணம், வங்காளராமாயணம், ஒரியா இராமாயணம், மராத்தி இராமாயணம் இவையெல்லாம் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் வந்தன.

அதற்குப் பிறகுதான் 20ஆம் நூற்றாண்டில் 1946–ஆம் ஆண்டு இராவணகாவியம் இயற்றப்பட்டிருக்கிறது.

கி.மு. 5ஆம் நூற்றாண்டில் பௌத்த இராமாயணம் வால்மீகி இராமாயணத்தில். ஆரம்பித்து துளசிதாஸ்இராமாயணம், அசாமி இராமாயணம், வங்காளஇராமாயணம், மராட்டி இராமாயணம்,ஒரியா இராமாயணம் என்றெல்லாம் 16ஆம் நூற்றாண்டு வரையில் பல இராமாயணங்கள் வரலாம். 20–ஆம் நூற்றாண்டில் இராவணகாவியம் மாத்திரம் வரக்கூடாதா?

இவ்வளவு மாறுபட்டஇராமாயணங்கள் வந்திருக்கின்றன. படித்த பண்டிதர்களுக் கெல்லாம் நன்றாகத் தெரியும். நான் சொன்ன இந்த இராமாயணங்கள் எதுவும் ஒன்றைப்போல் ஒன்று கிடையாது.இவ்வளவு இராமாயணங்களும் ஒன்றைப் போல ஒன்று இல்லாதபோது இராவணகாவியம் மாத்திரம் அதைப்போல்இருக்க வேண்டும் என்று கூறுவது அறியாமை அல்லவா? தேவையற்ற வாதம் அல்லவா? எந்த இராமாயணம் ஒன்றைப் போல் ஒன்று இருக்கிறது? எதுவுமில்லை.

கம்பனுக்கு மாறாக இராவண காவியம் பாடவில்லை!

அண்மையில் கம்பன் அறநிலை சார்பாக இராமாயணம் காண்டம் காண்டமாக வெளியிடப்பட்டு அதிலே எனக்குப் பால காண்டம், அயோத்தியா காண்டம் ஆகிய இரண்டு நூல்கள் வந்துள்ளன. அதில் வால்மீகி இராமாயணத்தில், கடவுள் வாழ்த்தாக வால்மீகி எந்த இறைவனையும் வணங்கவில்லை என்று அவர்களே சொல்கிறார்கள் .வால்மீகி கடவுள் வாழ்த்தே பாடவில்லை. ஆனால் கம்பன் முதல் பாடலிலேயே பரம் பொருள் வணக்கம் சொல்லித்தான் இராமாயணத்தைத் தொடங்குகிறான். அதற்காக வால்மீகிக்கு மாறாகக் கம்பன் பாடினான் என்று எப்படிச் சொல்லமுடியாதோ அதைப்போல இராவண காவியம் பாடிய குழந்தையைப் பார்த்து நீ கம்பனுக்கு மாறாகப் பாடினாய் என்று சொல்லமுடியாது

வால்மீகி இராமாயணத்தின்படி இராமனின் பிறப்பு எப்படி? கம்ப இராமாயணத்தில் இராமன் பிறப்பு எப்படி? அவர்கள் மாறுபடலாமா?

வால்மீகி இராமயாணத்தின் படி இராமனின் பிறப்பு ரிஷ்ய சிருங்கர் யோசனைப்படி அவருடைய உதவியுடன் பரிமக யாகம் என்ற ஒருயாகம் செய்யப்பட்டு – அந்த யாகத்தின் முடிவில் பாயசம் வழங்கப்படுகிறது. தேவர்கள் கொண்டுவந்து அந்தப் பாயசத்தைத் தருகிறார்கள்.

அந்தப் பாயசத்தைத் தசரதனிடத்தில் கொடுகிறார்கள். அந்தப் பாயசத்தில் பாதியைக் கோசலையிடம் தருகிறான் தசரதன். பாதியில் பாதியைக் கையேயிக்குத் தருகிறான். பாதியிலும் பாதிபோக மீதியைச் சுமத்திரைக்குத் தருகிறான் தசரதன். இது வால்மீகி இராமாயணம்

தசரதனக்குப் பதினாறு ஆயிரம் மனைவிகள்!

ஆனால் பௌத்த இராமாயணம் என்ற ஒன்று இருக்கிறதே; அதற்கு இன்னொரு பெயர் தசரதஜாதகம். அதில் என்ன சொல்கிறார்கள்தெரியுமா? தசரதனுக்கு 16 ஆயிரம் மனைவிகள். இதில் இன்னொரு வேடிக்கை – எதிர்பாராத வேடிக்கை நானே அதிர்ச்சிக்கு ஆளாகும் வகையிலான வேடிக்கை – நான் தயாரித்த புத்தக மன்று அஃது இராமனிடத்தில் – கம்பனிடத்தில் பக்தி கொண்டவர்கள் தயாரித்துள்ள புத்தகம் – ஜைன இராமாயணத்தில் வருகின்ற குறிப்பின்படி தசரதனுக்கு 16 ஆயிரம் மனைவிகள். அவர்களில் மூத்தவளுக்கு யார் யார் பிறந்தார்கள் தெரியுமா? அதிர்ச்சி அடையாதீர்கள்.

மூத்தவளுக்குப் பிறந்தவர்கள் இராமன், இலட்சுமணன், சீதை ஆகியோர் (பலத்த சிரிப்பு – கைதட்டல்)

தசரதனுக்குப் பிறந்த இராமனும் சீதையும் கணவன் மனைவி!

அந்த இராமாயணத்தின் படி தசரதன் மனைவிமார் களில் மூத்தவளுக்குப் பிறந்தவர்கள் இராமன், இலட்சுமணன், சீதை,

இராமனுக்கும் சீதைக்கும் என்ன உறவு என்று நாம் எண்ணிக்கொண்டிருக்கிறோம்? (கூட்டத்தினர் 'மனைவி' மனைவி' என்றுசொல்கிறார்கள்). இதைவிடவா புலவர் குழந்தை தவறு செய்துவிட்டார் இராவண காவியத்தில்? இராமனுக்குச் சீதை மனைவி என்று தான் புலவர் குழந்தை குறிப்பிட்டிருக்கிறார்.

இன்னொன்று விமலசூரியின் பௌம சரித இராமாயணத்தின் படி தசரதனுக்கு நான்கு மனைவிகள், கோசலை, கைகேயி, சுமத்திரை, சுபிரபை ஆகிய நான்கு பேர் தசரதனின் மனைவிகள்.

யாகம் நடத்திப் பாயசம் பங்கீடு செய்தார்கள் அல்லவா! அதிலேயே இராமாயணத்துக்கு இராமாயணம் வேறுபாடு. வால்மீகிஇராமாயணத்தில் பாயசத்தில் பாதி கோசலைக்கு, பாதியில் பாதி கைகேயிக்கு, மீதி சுமத்திரைக்கு என்று சொல்லப்பட்டிருக்கிறது. கம்பன் பாயசத்திற்கே போக வில்லை. அமுத பிண்டம் என்று அவர்சொல்லுகிறார். இங்குப் பாயசம் தரப்படவில்லை. பாயசம் திரவப்பொருள். அமுத பிண்டம் திடப்பொருள். ஆக, திரவம் திடமாக மாறி விடுகிறது – வால்மீகியிலிருந்து கம்பனுக்கு வரும்போது! அந்த அமுதபிண்டத்தில் கோசலைக்கு ஒருபங்கு,கைகேயிக்கு ஒரு பங்கு – அப்படிப் பங்கு தரும் போது கீழே சிந்துகிறது அல்லவா? – அதைப் பொறுக்கிச் சுமத்திரைக்குத் தருகிறார்கள். இது கம்பராமாயணத்தில்!

துளசிதாஸ் இராமாயணத்தில் எப்படித் தெரியுமா? பாயசத்தில் ஒன்பை " டு(1/2) (பலத்த சிரிப்பு) நான் வேடிக்கைக்காகச் சொல்ல வில்லை. புத்தகத்தில் இருப்பது அப்படி. துளசி தாஸ்ராமாயணத்தில் ஒன்பை டு(1/2) கோசலைக்கு! ஒன்பை " போர்"(1/4) கைகேயிக்கு. ஒன்பைபோர் "(1/4) சுமத்திரைக்கு!

மனைவிகளை வரிசைப்படுத்துவதில் கூட வேறுபாடு கம்பர் எப்படி வரிசைப்படுத்துகிறார் என்றால் கோசலை, கைகேயி, சுமத்திரை! வால்மீகி எப்படி வரிசைப்படுத்துகிறார் என்றால் கோசலை முதல் மனைவி, சுமத்திரை இரண்டாவது மனைவி, கைகேயி

மூன்றாவது மனைவி! இப்படி யெல்லாம் நீங்கள் மனைவிகளை மாற்றலாம். மனைவியைச் சகோதரியாக்கலாம். சகோதரியை மனைவியாக்கலாம்! புலவர் குழந்தை அடிப்படை மாறாமல் உண்மையான வரலாற்றுக் காலத்தைத் தந்திருக்கிறார்.

இராமாயணம் பற்றிப் பண்டித நேரு

பண்டித நேரு.” இராமாயணம் என்பது ஆரியர் திராவிடர் போராட்டம். அதற்காக எழுதப்பட்ட வரலாறு என்று சொன்னார். இது பெரியார் மட்டும் சொன்னதன்று; அண்ணா மட்டும் சொன்ன தன்று; நேருவைப்போலவே சீனிவாச அய்யங்கார் போன்ற சரித்திர விற்பன்னர்கள் அதைத்தான் சொல்லியிருக்கிறார்கள். இராமாயணம் என்பது ஆரியர் – திராவிடர் போராட்டம் தான் என்று கூறியிருக்கிறார்கள்.

ஆரியர்களுக்கும், திராவிடர்களுக்கும் அந்தக் காலத்தில் போராட்டம் நடைபெற்றது. அவர்கள் தென்னகத்தில் வந்து குடியேற எண்ணினார்கள் திராவிடர்கள் துரத்தினார்கள். அதன்காரணமாகப் போராட்டம் நடைபெற்றது. அவர்கள் யாகம் போன்றவற்றை நடத்தினார்கள் யாகம் எங்கள் கலாச்சாரம் அன்று என்று திராவிடர்கள் அவர்களைத் தாக்கினார்கள். அந்தக்கால கட்டத்திலே எழுதத் தெரிந்தவர்கள் கதை எழுதினார்கள்.

அப்படி எழுதும்போது இராவணன் என்றொரு கதாபாத்திரம் அதை வில்லனாக ஆக்கிக் கொண்டார்கள். இராமன் என்ற கதாபாத்திரத்தைக் கதாநாயகனாக ஆக்கிக்கொண்டார்கள்.

இந்திரன் – அகலிகை கதையில் மாறுபாடு!

இதே இராமாயணத்தில் அகலிகை பற்றி வால்மீகி என்ன சொல்லுகிறார்? கம்பர் என்ன சொல்லுகிறார்? வால்மீகி, கம்பர் இருவரும் அகல்யாவின் கதையைச் சொல்லும் போது மாறுபடுகிறார்கள்

கம்பர் சொல்லுகிறார் அகலிகையின் கணவன் கௌதம முனிவர் விடியற்காலையில் வீட்டை விட்டு வெளியேறுகிற நேரத்தில் இந்திரன் அந்த முனிவரைப்போல வேடம் பூண்டு உள்ளே வருகிறான். கணவன்தான் என்று கருதி அகலிகை இந்திரனைக் கட்டித்தழுவுகிறாள். பிறகுதான் கணவன் அல்லன். இந்திரன் வந்து ஏமாற்றி விட்டான் என்பதைப்புரிந்து கொள்ளுகிறாள். இப்படித்தான் கம்பர் எழுதுகிறார்.

ஆனால் வால்மீகி – முதலில் பார்த்தவர் வால்மீகி (சிரிப்பு) பிறகுதான் கம்பர் பார்த்தார். கம்பர் பார்த்த வர்கூட அல்லர் பார்த்ததைக் கேட்டவர் (சிரிப்பு) முதலில் பார்த்த வால்மீகி அகலிகை கதையில் என்ன சொல்லுகிறார்?

கௌதம முனிவர் வெளியே போகிறார். உடனே இந்திரன் முனிவர்வேடத்தில் உள்ளே வந்தான், அகலிகை, வந்திருப்பது இந்திரன்தான் என்பதைத் தெரிந்து கொண்டாள். " ஆகா! தேவலோகத்தின் அரசனே வருகிறானே!" என்று அவனை வரவேற்றாள்.வரவேற்று அவனை வாரித் தழுவிக்கொண்டாள். இருவரும் இன்பமாக இருந்தபோது உள்ளே நுழைந்த முனிவர் உண்மை–யைக்கண்டு கொண்டார். சாபமிட்டார்; இது வால்மீகி இராமாயணம்.

இப்படி இருக்கிறதா? இல்லையா? என்பதை இராவணகாவியத்தின்மீது சீறிவிழுபவர்கள் சிந்தித்துப் பார்க்கக் கேட்டுக்கொள்கிறேன்.

அது மாத்திரமன்று; இந்திரனுக்குக் கொடுத்த சாபத்திலும் இராமாயணத்துக்கு இராமாயணம் வேறுபாடு.

இந்திரனுக்கு வால்மீகி என்ன சாபம் கொடுத்தார்? முனிவர் இந்திரனைப் பார்த்து "அடப்பாவி! என் மனைவியைக் கெடுத்துவிட்டாயே" என்று ஆத்திரப்பட்டு " உன் ஆண்மை அற்றுப் போகக்கடவது " என்று சாபமிடுகிறார் இது வால்மீகி இராமாயணத்தில் கொடுக்கப்பட்ட சாபம்.

ஆனால் கம்பர் என்ன சொல்கிறார்? கௌதம முனிவர் இந்திரனைப் பார்த்து " என் மனைவியைக் கெடுத்த உன் உடல் முழுவதும் பெண்குறி ஆகக்கடவது" என்று சாபமிடுகிறார்.

கம்பனுக்கு எப்பொழுதும் 'இதிலேதான்' கவனம் இருக்கும். அதைப்பற்றி எழுதுவது என்றாலே கம்பனுக்கு ஒரு ஆனந்தம். நல்ல தமிழுக்கு இடையில் – இதையும் புகுத்துவதில் கம்பனுக்கு இணை கம்பன் தான் ! அதற்காகக் கம்பனைப் பாராட்டத்தான் வேண்டும்.

இந்திரனுக்குச் சாபம் கொடுத்த பின் அகலிகைக்கும் சாபம் தருகிறார்கள். "நீ காற்றை மாத்திரம் உட்கொண்டு கிட" என்று வால்மீகி இராமாயணத்தில் அகலிகைக்குச் சாபம் தரப்படுகிறது.

கம்பரோ – உணவில்லாமல் காற்றை மாத்திரம் சாப்பிட்டுக் கொண்டு எத்தனை நாள் கிடக்க முடியும்? எனவே கம்பன் அதை மாற்றிக் "கல்லாகப் போகக் கடவாய்" என்று அகலிகைக்குச் சாபம் விடுகிறான். இப்படிச் சாபம் கொடுத்ததிலேயே வேறுபாடு மாறுபாடு.

இராவணன் – மண்டோதரிக்குபிறந்த குழந்தை சீதை!

சீதையின் பிறப்பைப் பற்றி என்ன சொல்லப்படுகிறது?. இதிலும் ஒருவேடிக்கை காத்திருக்கிறது. மிதிலா நகரில் ஏர் உழுகிறநேரத்தில் ஒரு பெட்டி கிடைக்கிறது. பெட்டியை எடுத்துப்பார்த்தால் அதற்குள் ஒரு பெண் குழந்தை இருக்கிறது. அந்தக் குழந்தையை ஜனக மகாராஜா வளர்த்தார். அந்தக் குழந்தைதான் சீதை என்று ஒரு கதை.

இன்னொரு கதை என்ன தெரியுமா? இலங்காதிபதி இராவணனின் மனைவி மண்டோதரிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அந்தக்குழந்தைதான் சீதை! சீதை பிறந்தவுடன் அரண்மனைச் சோதிடனைக் கூப்பிட்டு ஆரூடம் பார்த்தார்கள். அந்தச் சோதிடன். " இந்தக் குழந்தை இங்கிருந்தால் இலங்கை அழிந்துவிடும். அதனால் இதைக் கொண்டு போய் எங்காவது விட்டுவிடு" என்று சொல்கிறான்.

உடனே மாரீசனைக் கூப்பிட்டு மாரீசன் எங்கே வருகிறான் என்பதைக் கவனியுங்கள் – அந்தக்குழந்தையை எங்கேயாவது விட்டுவிடும் படி சொல்ல – மாரீசன் சீதையைத் தூக்கிக்கொண்டு போய் பெட்டியில் வைத்து மிதிலாபுரிக்குப் பக்கத்தில் ஒரு வயலில் போட்டு விடுகிறான். அதைக்கண்டு பிடித்துத்தான் ஜனக மகாராஜா வளர்க்கிறார். இப்படி ஒரு வேறுபாடு.

இன்னும் ஒரு முக்கியமான வேறுபாடு – சீதை எப்படி இராமனைத் திருமணம் செய்து கொண்டாள் என்றால் – வில்லை ஒடித்தான் இராமன். அதன் பிறகு திருமணம் நடந்தது என்பது கதை. கம்பன் என்ன சொல்லுகிறான்? வால்மீகி என்ன சொல்லுகிறான்?

வில்லை வளைப்பதற்கு முன்பே விசுவாமித்திர முனிவரோடு இராமனும் இலட்சுமணனும் வந்து கொண்டிருந்தார்கள். மாளிகையின் உப்பரிகையில் நின்று சீதாதேவி இராமனைப்பார்க்கிறாள்.

" அண்ணலும் நோக்கினான்
அவளும் நோக்கினாள்.
கண்ணொடு கண் இனை நோக்கொக்கின்
வாய்ச்சொற்கள் என்ன பயனுமில"

என்பதைப் போல அந்தக் காட்சியை உருவாக்கியிருக்கிறான் கம்பன். ஆனால் வால்மீகி அப்படிச் சொல்லவில்லை.

துளசி இராமாயணத்திலோ – இராமனும் சீதையும் ஒரு தோட்டத்தில் சந்திக்கிறார்கள். சந்தித்துக் காதல் கொள்கிறார்கள். விசுவாமித்திரரும், இலட்சுமணனும் அப்போதும் இராமனுடன் தான் இருக் கிறார்கள். அவர்கள் இருவரையும் ஓரமாக ஒதுக்கிவிட்டு இராமனும் சீதையும் காதல் கொள்கிறார்கள். (சிரிப்பு) இஃது என் சொந்தக்கதை அன்று. துளசிதாஸ் இராமாயணத்தில் வரும் கதை. (சிரிப்பு)

அதற்குப் பிறகு வில் ஒடிக்கும் இடத்துக்கு வருகிறார்கள், இராமனும் சீதையும் ஏற்கெனவே காதலித்திருப்பவர்கள். சீதையைத்

திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்பதற்காக எல்லா மன்னர்களும் வந்து வில்லை ஒடித்துப் பார்க்கிறார்கள். முடியவில்லை.

உடனே ஜனக மகாராஜா மண்டபத்தில் உள்ளவர்களைப் பார்த்து " அய்யோ ! என் மகளுக்குத் திருமணமே ஆகாதா? இந்த வில்லை ஒடிக்கக் கூடியவன் ஒருவன் கூடக்கிடையாதா? என்று புலம்புகிறார். அப்போது விசுவாமித்திரர், இராமன், இலட்சுமணன் மூன்று பேரும் இருக்கிறார்கள்.

உடனே இலட்சுமணன் எழுந்து " நான் வில்லை ஒடிக்கிறேன் " என்று கிளம்புகிறான். (சிரிப்பு) இலட்சுமணன் அப்படி ஒடித்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? (சிரிப்பு) உடனே இராமன் பதறிப்போய், இலட்சுமணனைத் தடுத்து நிறுத்திவிட்டுத் தான் சென்று வில்லை ஒடித்துச் சீதையை மணம் செய்து கொள்கிறான் – இது துளசிதாஸ் இராமாயணம்.

ஆனால் வால்மீகி இராமாயணத்தில் காதல் சங்கதியே கிடையாது நேராக சுயம்வர மண்டபத்துக்கு வருகிறார்கள். வில்லை ஒடிப்பவர்களுக்குப் பெண்ணைத் தருகிறேன் என்று ஜனகன் அறிவிக்கிறான். இராமன் வில்லை எடுத்து ஒடித்துவிட்டுச் சீதையைத் திருமணம் செய்து கொள்கிறான். அதற்குமுன் காதலும் கிடையாது. கத்தரிக்காயும் கிடையாது.

நாடகத்தில் அண்ணா கையாண்ட வித்தை!

இப்படிப் பல மாற்றங்கள் – இராமாயணத்துக்கு இராமாயணம் இருக்கின்றன என்பதற்காகத்தான் நான் இவைகளைச் சுட்டிக்காட்டுகிறேனேயல்லாமல் வேறல்ல. இவ்வளவு மாற்றங்களையும் நாம் ஏற்றுக் கொண்டிருக்கும் போது புலவர் குழந்தை செய்த மாற்றத்தை மாத்திரம் எற்றுக் கொள்ள ஏன் தயங்கவேண்டும் என்பதை எண்ணிப் பார்க்கிறேன்.

அவர் என்ன மாற்றம் செய்துவிட்டார்?

"இரக்கமெனும் ஒரு பொருளிலா அரக்கன்"
என்று இராவணனைக் கம்பன் குறிப்பிடுகிறான்.

அறிஞர் அண்ணாவின் "நீதிதேவன் மயக்கம்" நாடகமே உலகத்தில் எந்த எழுத்தாளரும் கையாளாத அற்புதமான வித்தை – அறிஞர் அண்ணா அந்த நாடகத்தில் கையாண்ட வித்தை

ஒரே வாக்கியத்தை வைத்து ஒரு நாடகம்.
"இரக்கமெனும் ஒரு பொருளிலா அரக்கன்"

என்று இராவணனைக் கம்பன் பழித்த காரணத்திற்காக இராவணன் நீதிமன்றம் செல்லுகிறான். கம்பன் மீது வழங்குப் போடுகிறான். கம்பன் விசாரிக்கப்படுகிறான் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்கள். அப்பொழுது இராவணன், இராமனால் சேதமடைந்த சூர்ப்பனகையைக் கொண்டுவந்து நிறுத்துகிறான் இவளுடைய மூக்கை அறுத்தது யார்? மார்பை அறுத்தது யார்? இராமனல்லவா? இது தான் இரக்க குணத்துக்கு அடையாளமா? என்று கேட்கிறான்.

தாருகாவனத்து ரிஷி பத்தினிகளில் கற்பை அழித்தது யார்? சிவபெருமான் அல்லவா! அஃது இரக்க குணம் உள்ளவர்களின் செயலா? என்று கேட்கிறான்.

"இவர்களெல்லாம் இரக்கம் உள்ளவர்கள் என்றால் சீதா தேவியைக் கைபடாமல் வைத்திருந்து திருப்பித் தந்தேனே! நான் இரக்கம் இல்லாதவனா? என்று இராவணன் கேட்கும் காட்சி இருக்கிறதே அறிஞர் அண்ணாவே இராவணனாக வேடம் பூண்டு நடித்து இந்தக்கேள்வியைக் கேட்கின்ற காட்சி இன்னும் நம் கண்முன்னாலேயே நிலாடிக் கொண்டிருக்கிறது.

இதைத்தான், இந்த அடிப்படைக் கருத்தைத்தான் மையமாக வைத்துப் புலவர் குழந்தை இராவண காவியத்தைத் தந்தார்.

அந்த இராவண காவியம் நாடெல்லாம் பரவிட வேண்டு.

இஃது ஒரு கருத்தை இன்னொரு கருத்து மறுக்கிறது என்பதன்று ஒருவரலாற்றை இன்னொரு வரலாறு மறுக்கிறது என்பதன்று.

ஆரிய – திராவிடர் போராட்டம் அன்றைக்கு நடைபெற்றது. அன்றைக்கு அவர்களுக்குச் சார்பாக அவர்கள் ஒரு கதை எழுதிக் கொண்டார்கள். இன்றைக்கு நமக்குச் சாதகமாக நாம் ஒரு கதை எழுதிக்கொள்கிறோம்.

கற்பனைக் கதையால்
நாடு, காடாகக் கூடாது!

இராவணன் என்று ஒருவன் இல்லை! கற்பனை! இராமன் என்று ஒருவன் இல்லை – கற்பனை! அந்தக் கற்பனையால்தான் இன்றைக்கு நாடே காடாகிக் கொண்டிருக்கிறது. அது வேறு விவகாரம்.

இருந்தாலும் கூட ஒரு இனத்தினுடைய மானத்தை – மதிப்பை மரியாதையை – உணர்வைக் குலைக்கின்ற வகையிலே ஏடுகள் இருந்தால் – அவை புராண ஏடுகள் – இதிகாச ஏடுகள் என்றபெயரால் கடவுள் தன்மையோடு போற்றப்பட்டால் இந்த இனம் இன்னும் தாழ்ந்து தாழ்ந்து தலை குனிந்து போக நேரிடும் என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இராவண காவிய விழாக்கள் தேவைப்படுகின்றன.

அந்தத் தேவையை நிறைவு செய்த 'நாமக்கல் பாவேந்தர் இலக்கியப் பேரவைக்கு ' நன்றி சொல்லி விடைபெறுகிறேன்.

இராவண காவியம் விழா நிகழ்ச்சிகள்

நாமக்கல் பாவேந்தர் இலக்கியப் பேரவை, மாசிலாத்தமிழ் மாக்கதையான இராவண காவியத்தினை இருபகுதிகளாக நடத்தியது. முதல் பகுதி எழு தொடர் சொற்பொழிவுகள் 26–1–94, 20–2–94, 22, 24–3–94 ஆகிய நான்கு சிலம்பொலி செல்லப்பனார் அவர்களும், 16–2–94, 9, 10–3–94 ஆகிய மூன்று சொல்வேந்தர் செல்வேந்திரன் அவர்களும் ஆற்றினார்கள்.

அடுத்த பகுதியாக நிறைவு விழா 29, 30–4–94 ஆகிய இரு நாட்கள் நாமக்கல் செ. ப. செ. திருமண அரங்கில் அதன் உரிமையாளர் திரு. பழனி ஆசிரியர் முன்னிலையில் நடை பெற்றது. முதல் நாள் பட்டிமன்றம் சிலம்பொலியார் நடுவராக இருந்தார். இரண்டாம் நாள் கருத்தரங்கு, அதற்குத் தலைமை முற்போக்குச் சிந்தனையாளர் திரு. என். பி. இராமசாமி அவர்கள், அடுத்து நிறைவு விழா, பாவேந்தர் இலக்கியப் பேரவையின் தலைவர் புலவர். ப. சுப்பண்ணன் தலைமை ஏற்றார். பேரவையின் செயலர் புலவர். மு. கந்தசாமி அனைவரையும் வரவேற்றார்.

நிறைவு விழாவில், சிலம்பொலியார் எழுதிய சிலப்பதிகாரம் தெளிவுரை – என்னும் நூலினைக் கலைஞர் அவர்கள் வெளியிட்டு அவருக்குக் கணையாழி அணிவித்துச் 'சிந்தனைச் செல்வர் சிலம் பொலியார்' – என்னும் பட்டத்தினை வழங்கிச் சிறப்புச் செய்தார்.

இராவண காவியத்தினை இயற்றிய புலவர். குழந்தை அவர்களின் முதல் மகளார் திருமதி. சமத்துவத்திற்குக் கலைஞர் அவர்கள் பொன்னாடை அணிவித்துப் பாராட்டுத் தெரிவித்தார்.

விழாவில் சிலம்பொலியார், திரு. மு. தமிழ்க்குடிமகனார் உரையாற்றிய பின்னர்க் கலைஞர் அவர்கள் விழாநிறைவுப் பேருரையாற்றினார்கள். பேரவையின் துணைச் செயலர் திரு. சி. மணிமாறன் நன்றி கூற விழா இனிது முடிவுற்றது.

இராவண காவியம் – நூற்குறிப்பு

இந்நூல் இராவணனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட ஒப்பற்ற காவியம். தமிழ்ப் பண்பாட்டிற்கேற்ப ஆக்கப்பட்ட இந்நூல் தமிழ்ப் பற்றை இன உணர்வை ஊட்டும் மிகச் சிறந்த காப்பியமாகும்.

தமிழகக் காண்டம், இலங்கைக் காண்டம், விந்தக் காண்டம், பழிபுரி காண்டம், போர்க் காண்டம் என்னும் ஐந்துகாண்டங்களும் 57 படலங்களும், 3100 பாடல்களும் கொண்ட இக்காவியம் தமிழ், தமிழ் என்றே முழங்குகிறது.

"தென்றிசையைப் பார்க்கின்றேன் என்சொல்வேன் என்றன்
சிந்தையெலாம் தோள்களெலாம் பூரிக்கு தடடா!
அன்றந்த இலங்கையினை ஆண்டமறத் தமிழன்
ஐயிரண்டு திசைமுகத்தும் தன்புகழை வைத்தோன்
என்தமிழர் மூதாதை என்தமிழர் பெருமான்
இராவணன் காண்! அவன் நாமம் இவ்வுலகம் அறியும்"

என்று பாடிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கருத்திற்கேற்ப இராவண காவியத்தை ஆக்கியுள்ளார்.

இராவண காவியம் இராவணன் மீது சுமத்தப்பட்ட பழியைப்போக்கி அவன் தூய்மையானவன் என்பதை நிலைநாட்ட எழுந்தநூல்.

தமிழ்நாடு அறக்கட்டளை ★ தமிழ்வேள்
Chennai-18

"இந்நூல் பழமைக்குப் பயணச்சீட்டு; புதுமைக்கு நுழைவுச்சீட்டு; தமிழ் மறுமலர்ச்சியின் தலைச்சிறந்த நறுமலர்; தமிழரின் புதுவாழ்வுக்கான போர் முரசு; தமிழரசுக்குக் கால்கோள்; விடுதலை கீதம்"

என்று அறிஞர் அண்ணா பாராட்டியுள்ளார்.

"வையகத்திற்கு வாழ்வுநெறி யுணர்த்த வந்த வள்ளுவம் வாழ்விலக் கணம் என்றால், அவ்வாழ் விலக்கணத்தின்முழுநிறை வாழ்விலக்கியம் புலவர் குழந்தை அவர்களின் இராவணகாவியம்"

என்று கலைஞர் அவர்கள் புகழ்ந்துரைத்துள்ளார்.

இராவண காவியம் 1946–இல் பாடப்பட்டது. 1948–இல் அக்காவியத்தைத் தடையென்னும் சிறையிலடைத்து மகிழ்ந்தனர். 23–ஆண்டுகட்குப்பிறகு 1971–இல் கலைஞர் அவர்கள், பூட்டிய இருப்புக்கூட்டின் கதவினைஉடைத்து அச்செந்தமிழ்க் காவியச் செல்வியைப் புதிய எழிலோடும் பொலிவோடும் உலாவவிட்டார்.

இராமாயண காலம் 'ஆரிய–திராவிடக் கலாச்சாரங்கள்' மோதிக் கொண்ட நேரம் இராமாயணம் அதன் அடிப்படையில் எழுதப்பட்ட ஒரு கற்பனைக் காப்பியம். புலவர்கள் தம் கற்பனை ஆற்றலுக்கேற்பப் பலவாறு புனைந்து பாடியுள்ளார்கள். அதனால் நாட்டில் பல்வேறு இராமயணங்கள் தோன்றிப் பயின்றுவருகின்றன. அந்த வகையில் இனமானம் காக்கத் தோன்றிய நூலே இராவண காவியமாகும்.

இராவண காவியம் இயற்றிய புலவர் குழந்தை அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்.

'இராவண காவியம்' – என்னும் ஒப்பிலாத தனித் தமிழ்ப் பெருங்காவியத்தை இயற்றித் தமிழ் மக்களிடையே புத்துணர்ச்சியினையும் இனவெழுச்சியினையும் தன்மானப் பண்பினையும் கிளர்ந்தெழச்செய்தவர் புலவர் குழந்தை அவர்கள் அவரின் சொந்தஊர்கொங்கு நாட்டின் பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த ஓலவலசு என்னும் சிற்றூர்.

ஓலவலசுப் பண்ணக்காரர் என்னும் பெருங்குடியில் 1–7–1906–இல் முத்துசாமிக்கவுண்டர் – சின்னம்மாள் ஆகியோருக்கு மகனாய்த் தோன்றினார்.

இவர்தம் பள்ளிப் படிப்பு எட்டுத் திங்களே, இளமையிலே யேகவிபாடும் ஆற்றலைப் பெற்றிருந்தார். ஆசிரியர் உதவியின்றித்தாமாகவே முயன்று படித்து 1934–இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் புலவர் பட்டம் பெற்றார். 39 ஆண்டுகள் ஆசிரியராகப் பணிசெய்து ஓய்வு பெற்றார். அனைவராலும் புலவர் என்று சிறப்பாக அழைக்கப்பட்டார்.

இந்தி எதிர்ப்புப் போரில் பங்கு கொண்டு 'இந்தி ஆட்சி மொழிஆனால்' என்னும் ஆராய்ச்சி நூலினை வெளியிட்டார். பல பிரிவுவேளாண் மக்களை ஒன்றிணைக்க 'வேளாளன்' என்னும் திங்கள் இதழினை நடத்தினார் தொல்காப்பியப் பொருளதிகாரம், நீதிக் களஞ்சியம் முதலியவற்றிற்கு உரைஎழுதியுள்ளார். அரசியல் அரங்கம், நெருஞ்சிப்பழம், காமஞ்சரி,உலகப் பெரியோன் கென்னடி, திருநணாச்சிலேடை வெண்பா ஆகிய இலக்கிய நூல்களையும் 29 உரை நடைநூல்களையும்,பள்ளிமாணாக்கர்களுக்கானஇலக்கண நூலை – யும்,தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் என்னும் நூலையும் இயற்றியுள்ளார்.

1925 முதல் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்து தொண்டாற்றியமையால் இவர் 'பெரியாரின் சீடர் –

கருப்புச்சட்டைக்காரர்' என்று பெயர் பெற்றார். மத நம்பிக்கை இல்லாதவர். விதவை மணம் – கலப்பு மணங்களை ஆதரித்தவர்.1930–இல் 'ஞான சூரியன்'– ஆசிரியர் சாமி சிவானந்த சரசுவதி என்பாருடன் 'கடவுள் இல்லை' என்று நான்கு நாட்கள் சொற்போரிட்டு வ ாகை சூடினார்.

அறிஞர் அண்ணா அவர்களும், கலைஞர் கருணாநிதி அவர்களும் இவர்பால் பெருமதிப்பும் பேரன்பும் கொண்டிருந்தனர். புலவர்குழந்தை அவர்களின் துணைவியார் முத்தம்மையார். இவர்கட்குச் சமத்துவம், சமரசம் என்னும் பெண் மக்கள் இருவர் உள்ளனர்.வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து 25–9–1972–இல் இயற்கை எய்தினார். ஐயாவை என்றும் நினைந்து அவர் புகழ் வளர்ப்போம்.

இராவண காவியம் எதற்கு?

இராவண காவியம், ஆரிய வான்மீகியாலும் ஆரிய அடிமையானதமிழ்க் கவி கம்பராலும் தம் நோக்கத்துக்காக வேண்டுமென்றே இராவணன் மீது ஏற்றிய இழி குணங்களையும் கொடுஞ்செயல்களையும் களைந்து எறியவும் இராவணனுடைய தூய்மைக்கு ஆதாரமான பல புகலவும் அஃதே போல இராமனுடைய குணம் – செயல்ஆகியவற்றிலே காணக் கிடைக்கும் தவறுகளைத் தெளிவுபடுத்தவும் தோன்றிய நூலாகும்.

திராவிட இனமக்களின் எழில் மிக்க வாழ்க்கையிலே ஆரிய இனக்கலாச்சாரம் தூவப்பட்டதை எடுத்துக் காட்டவே இராவணகாவியம் செய்யப்பட்டது.

வால்மீகி, சாதாரண அரசகுமாரனாகக் கூறியுள்ள இராமனைக் கம்பர் திருமாலின் அவதாரமாக்கினதும் எவளோஒருத்தி பெற்று எறிந்துவிட்டுச் செல்ல, சனகனால் கண்டெடுத்து வளர்க்கப்பட்ட சீதையைத் திருமகளின் அவதாரமாக்கியதும் மாபெரும் தமிழர் தலைவன் இராவணனை அரக்கனாக்கியதும் மறத்தமிழர்களை வானரங்களாக்கியதும் நம் இனத்தையே காட்டிக் கொடுத்த

மானங்கெட்ட தமிழர்களை ஆழ்வார்ப் பட்டம் சூட்டிப் பெருமைப்படுத்தினதுமான போலிப் பொய்க்கூற்றுக்களைப் போக்குவதற்காகவே இராவணகாவியம் செய்யப்பட்டது.

இராவணன் தமிழர் மாபெருந் தலைவன்' விந்தம் முதல் குமரிவரை ஒரு மொழி வைத்து ஆண்ட பழந்தமிழ் வேந்தன் தண்டமிழ்வேலித் தமிழகத்தே ஆரியத் தொத்து நோய் பரவாமல் புகாமல்தடுத்து நின்ற தனித்தமிழ்க் காவலன். தமிழை – தமிழ் இனத்தை தமிழ் நாட்டைக்காக்கத் தனிக்களத்து ஒழிந்த தன்மானத் தமிழ்வீரன் புகழ்ச்சிதனை விரும்பாத பெருந்தகையன்.

இராவணன் சீதையை எடுத்து வந்து இலங்கை மாநகரிலேவைத்துப் பாதுகாத்து வந்தானேயன்றி, அவள் மீது காதல்கொண்டு எடுத்து வரவுமில்லை அவளை வற்புறுத்தவுமில்லை.அங்ஙனம் செய்ய எண்ணியிருந்தால் அவனுக்கு அஃது அரியதுமன்று. தன் தங்கையை உருக்குலைத்த கொடியவர்களான இராம–இலக்குவர்கட்குப் பாடம் புகட்டவே தமிழர் போர் முறைப்படி சீதையை எடுத்து வந்ததை உணர்த்தவே இராவண காவியம். பாடப்பட்டது

வாலி என்பான் இராவணன் ஆட்சியின் கீழ் தமிழகத்தின் ஒருபகுதியை ஆண்டு வந்த தமிழ் மாமன்னன் மாபெரும் வீரன் சீரியசெங்கோலினன் குணப்பெருங்குன்றம் இத்தகைய வாலியை, நேர்மையும் வீரமும் இன்றி மறைந்திருந்து அம்பெய்து கொன்ற இராமன் அறக் கொடியோன் என்பதைக் காட்டவே இராவணகாவியம். செய்யப் பட்டது.

தாடகை அரிக்கியல்லள், விந்தச் சாரலில் உள்ள ஒரு நாட்டைஆண்ட தமிழரசி ஒழுக்கமே உருவானவள் – முதியாள். அவள் செய்தகுற்றம் அவள் நாட்டுக்குள் அனுமதியின்றி வந்து கொலை வேள்வி செய்த ஆரியர்களைத் தடுத்தது. அதனால் பெண்ணென்றும்பாராது தாடகையைக் கொன்ற இராமன் அறக்

கொடியோன் என்பதைத் தமிழர்கள் உணரவே இராவணகாவியம். பாடப்பட்டது.

ஆரிய இராமன் ஏழிரண்டாண்டு பூழிவெங்கான வாழ்க்கைநடத்துதற்கு மட்டும் தமிழகத்திற்கு வரவில்லை. வட நாட்டில்என்ன காடுமலைகளா இல்லை? தமிழ் நாட்டுக்குள் ஏன்வரவேண்டும்? தமிழர்களை வஞ்சித்துக் கொன்று தங்கள்ஆதிக்கத்தை நிலைநாட்டவே, ஆரிய முனிவர்கள் இராமனை இங்குஅழைத்து வந்தனர் என்பதை உணர்த்தவே இராவண காவியம் பாடப்பட்டது.

இராவணன் காலத்தே விந்த முதல் குமரிவரை வாழ்ந்து வந்ததமிழ்க்குடி மக்கள், தமிழ்ப் பேரரசர்கள், சிற்றரசர்கள்தண்டமிழ்ப் பெண்டிர்கள் ஆகிய எல்லாரையுமே ஆரியஅடிமையான கம்பரால் தமிழ்மக்கள் வாயினால் உச்சரிக்கவேமுடியாத அளவுக்கு இழிவாகப் பழித்துக் கூறியிருக்கும் பழிப்புரையைப் போக்கி, இராவணனின் பெருமை தமிழ் மக்களின் சிறப்பு ஆகியவற்றைத் திறம்பட எடுத்துக்காட்டுவதன் மூலம்தமிழ்நாட்டு வரலாறு இடையறாது தொடர்ந்து நடைபெறுதற்பொருட்டே இராவணகாவியம் செய்யப்பட்டது.

பெயரைக் கேட்கினும் ஆரியர் அஞ்சி நடுங்கிய ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பிறந்தநாள் கொண்டாடுவதில்லை. இமயத்தை வென்ற கரிகாலன் பிறந்தநாள் கொண்டாடுவதில்லை. தமிழைப்பழித்த வடவர் தலையில் இமயக்கல்லேற்றி வந்த சேரன்செங்குட்டவன் பிறந்தநாள் கொண்டாடுவதில்லை. ஆனால் ஆரியஇராமன் பிறந்தநாளை 'ராமநவமி' – என்று கொண்டாடிவருகின்றனர். அந்த ராமநவமி நாளில் – ராமலீலாக் கொண்டாட்டத்தில் தமிழர் மாபெருந்தலைவனான இராவணன் உருவத்தைத் தீயிட்டு எரிக்கும் வடவர் கொடுஞ்செயலைக் கண்டுமகிழும் தமிழர்களின் அறியாமையைப் போக்கவே இராவணகாவியம் செய்யப்பட்டது.

இராவண காவியக் கதைச் சுருக்கம்

மிகப் பழங்காலத்தே தமிழ்நாடு இன்றுள்ள எல்லைக் குட்பட்டிருக்கவில்லை; வடக்கில் பனிமலைகாறும் பரவியிருந்தது; அயல்நாடார் குடி யேற்றத்தால் பின்னர் விந்தமலையை வடக் கெல்லையாகக் கொண்டது. தென்கடல் நிலமாக இருந்தது.அது, இன்றுள்ள குமரிமுனைக்குத் தெற்கில் ஆயிரங் கல்லுக்குமேல் அகன்றிருந்தது. கிழக்கிலும் வங்கக்கடலும், சாவா முதலிய தீவுகளும் ஒரே நிலப்பரப்பாயிருந்தது. தென்னிலத்தில் குமரிமலை, பன்மலை முதலிய மலைகள் ஓங்கியுயர்ந்திருந்தன. குமரிமலையில் குமரியாறும், பன்மலையில் பஃறுளியாறும் தோன்றி அந்நிலத்தை வளஞ்செய்தன.

குமரியாற்றுக்கும் பஃறுளியாற்றுக்கும் இடைப்பட்ட நிலம் பெருவளநாடு எனவும், பஃறுளிக்கும் தென்கடலுக்கும் இடைப்பட்டநிலம் தென்பாலிநாடு எனவும் வழங்கின; பஃறுளியாற்றங்கரையில் இவ்விரு நாடுகளின் தலைநகரமான மதுரை இருந்தது. குமரிக்கும் விந்தத்திற்கும் இடைப்பட்ட நிலம் திராவிடம் என வழங்கிற்று. அதுவேளிர் என்னும் சிற்றரசர் பலரால் ஆளப்பட்டு வந்தது. திராவிடத்தின் மேற்கில் சேரநாடு இருந்தது திராவிடத்தின்கிழக்கில் சோழநாடு இருந்தது. இவ்வைவகைப்பட்ட தமிழகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நானிலமாக மக்கட்குவேண்டிய எல்லாச் செல்வமும் பொருந்தியிருந்தது.

நானில மக்களும் தங்களுக்குள் ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு அவன் ஆணைக்குட்பட்டு வாழ்ந்து வந்தனர். பின்னர்த்தமிழக முழுமைக்கும் ஒரு மாபெருந் தலைவனை ஏற்படுத்தினர்.அவன் தமிழகத்தின் நடுவில் – இன்றுள்ள இலங்கையின் தென்மேற்கில் இருந்த ஒரு தொன்னகரில் இருந்து தமிழகத்தை ஆண்டு வந்தனன்.அப்பண்டையோன் மரபில் வந்தவரே பாண்டியராவர். அம்மாபெருந் தலைவன் வழிவந்த ஒருவன் தன் மகனைத்

தென்னாட்டுக்கும், மற்றிரு தமிழ்த் தலைமக்களைச் சோழநாடு, சேரநாடுகட்கும் தலைவராக்கினான். அம்மூவர் வழிவந்தோரே பாண்டிய சோழ சேரராவர்.

கி.மு. 31 திருவள்ளுவர் ஆண்டாகும். தி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன்தென்கடல் பொங்கித் தென்பாலியையும், கிழக்கு நாட்டின் பெரும்பகுதியையும் வாய்க்கொண்டது; பின், தி.மு. 2500 இல் ஒரு முறை கடல் பொங்கிப் பெருவளத்தின் பெரும்பகுதியையும், கிழக்குநாட்டையும் விழுங்கிற்று. பின் தி.மு. 700இல் ஒருமுறை கடல் பெருகித்திராவிடத்தின் ஒரு பகுதியையும் உண்டேப்பமிட்டது.

இரண்டாங் கடல்கோளின் பின்னர் இலங்கை உண்டானது. இலங்கை நாட்டின் நடுவில் இருந்த முக்கூடல் மலைமீது இலங்கை நகர்இருந்தது. மூன்றாங் கடல்கோளுக்கு முன் இலங்கை யிலிருந்துதமிழகத்தை யாண்டுவந்த தமிழரின் மாபெருந் தலைவர் வழிவந்த வச்சிரவாவுவின் மனைவியான கேகசி என்பாள் இராவணன், கும்பகன்னன், பீடணன் என்னும் மூன்று ஆண்மக்களையும், காமவல்லிஎன்னும் ஒரு பெண் மகளையும் பெற்றனள். மூத்தவனான இராவணன் முடிபுனைந்து தமிழகத்தை ஆண்டு வந்தனன்.

மலைவளங்காணச் சென்ற இராவணனும், திராவிடத்தைச் சார்ந்த முதிரை நகரிலிருந்து முல்லை நாட்டையாண்டு வந்த மாயோன்மகள் வண்டார் குழலியும் எதிர்ப்பட்டுக் காதல் கொண்டு மணம் புரிந்து இல்லறம் நடத்தி வந்தனர். வண்டார்குழலி சேயோன் என்னும் செம்மலைப் பெற்றனள்.

தமிழகத்தின் வடக்கெல்லையான விந்தச்சாரல் பல சிறுநாடுகளாகப் பாகுபட்டிருந்தது, வடநாட்டில் ஆரியர் என்னும்ஓரினத்தினர் வாழ்ந்து வந்தனர். அவர்களில் கல்வி யறிவுள்ளமுதியோர் சிலர், இராவணன் தோன்றுவதற்கு நெடுநாள்முன்னரே துறவுக் கோலத்துடன் தமிழகம் போந்தனர்.தமிழ்மக்கள் அன்னாரை அன்புடன் வரவேற்று ஊணுடை

யுதவிப்போற்றி வந்தனர். அவர் தமிழ் கற்றும், தமிழரிடம் நெருங்கிப்பழகியும் வந்தனர். இவ்வாறே பின்னரும் பின்னரும் பலர் வந்தனர். நாளடையில் அவர் தமிழகம் முழுவதும் போந்து, தமிழந்தணருடனும், புலவருடனும் நெருங்கிப் பழகி அரசர் உறவையும் பெற்றனர். நாளாகவாக ஆரிய இளைஞரும் வந்து, தமிழ்ச் செல்வ இளைஞரிடம் தோழமை செய்யும் பார்ப்பன வேலையும் சிலர்பார்த்து வந்தனர்.

நாளடைவில் பலர் பெண்டு பிள்ளைகளுடன் குடியேறி விந்தக்காடுகளில் இலைக்குடில்கள் அமைத்து வாழ்ந்து வந்தனர் அவர் வேள்வி மூலம் உயிர்களைக் கொன்றுண்ணத் தொடங்கினர்.தமிழ்மக்கள் அதனைத் தடுத்தனர். அவர் கேட்கவில்லை.இருபாலார்க்கும் போருண்டானது.அம்மக்கட்போர் தமிழாரிய மன்னர் போரானது. முடிவில் வடவரசர் தோற்றனர். ஆரிய முனிவர்கள் அஞ்சினவர் போல நடித்துப் பல தமிழரசர்களைவஞ்சித்துக் கொன்றனர். நூற்றுக் கணக்கான தமிழர்கோட்டைகளைத் தீயிட்எரித்தனர்.

விந்தச்சாரலி லிருந்த இடைவள நாட்டை யாண்டு வந்த தாடகையென்னும் தமிழரசி இராவணனது துணையை வேண்டினள். அவன் சுவாகு என்னும் படைத்தலைவனைப் பெரும் படையுடன் அனுப்பினான். சுவாகு இடைவளஞ் சென்று ஆரியப் புலை கேள்வியையகற்றிக் காத்துவந்தான். அதனால், கோசிகன் என்னும் ஆரிய முனிவன் வேள்வி செய்ய முடியாது மனமுடைந்து சென்றனன்.

வடநாட்டில் சரயுவாற்றங் கரையில் உள்ள அயோத்தியில் தசரதன் என்னும் சிற்றரசன் ஒருவன் இருந்தான். அவன்கோசலை,சுமத்திரை என்னும் இரு மனைவியருடனும், பல காதல் மகளிருடனும் களித்து வந்தான்; தனது தோள்வலியால் பலநாடுகளை வென்று கோசலம் என்னும் நாட்டை நிறுவிப் பேரரசனானான். பின் தன் தகுதிக்கேற்பப் பேரரசனான கேகயன்மகள் கைகேசியைக் கேட்டான். அவன் மறுக்கவே, தனது நாட்டைக் கைகேசிக்குப் பரிசமாகக் கொடுத்து அவளை மணந்தனன்.

கிழப்பருவமுற்றும் பிள்ளையில்லாது வருந்திய தசரதன், குலகுரு வசிட்டர் சொற்படி கலைக்கோட்டு முனிவனைக் கொண்டு குதிரைவேள்வி செய்தனன்; ஓர் ஆண் குதிரை படையுடன் ஓராண்டில் நாடு சுற்றி மீண்டது. முனிவர் வேள்வி தொடங்கினர். அவ்வேள்விக் குதிரையைக் கோசலை வாள் கொண்டு மூன்றுவெட்டில் வெட்டி வீழ்த்தினள். கோசலை தன் கணவனைத்தழுவுவதுபோல் வெட்டுண்ட அவ்வாண் குதிரையைத் தழுவி அவ்விரவைக் கழித்தனள். சடங்குகள் முடிந்த பின் பல பகல்குதிரை, ஆடு, மாடு, ஆமை, பாம்பு, பறவை முதலிய பன்னூற்றுக்கணக்கான உயிர்களைக் கொன்று தின்று சோமக் கள்ளுண்டு இன்புற்றனர். தசரதன் கலைக்கோடர் முதலிய வேள்வி யாசிரியர்மூவர்க்குங் கோசலை முதலிய மூன்று மனைவியரையும் காணிக்கையாகக் கொடுத்தனன். அவர்களுடன் கனிமொழி பேசிக்கூடிக்கலந்தின் புற்று மூவரும் கருப்பமுறவே அவர்கள்அம்முவருக்கீடான பொருள் பெற்றுக்கொண்டு அம்மூவரையும் தசரதனிடம் ஒப்பித்துச் சென்றனர். கருப்ப முதிர்ந்து கோசலை இராமனையும், கைகேசி பரதனையும், சுமத்திரை இலக்குவ சத்துருக்கரையும் பெற்றனர். மக்கள் வளர்ந்து மணப்பருவ முற்றனர்.

மனமுடைந்து சென்ற கோசிகன் அயோத்தியை யடைந்து வேள்வித்துணையாக இராமலக்குவரை அழைத்துக் கொண்டு இடைவள நாட்டையடைந்து ஒரு சோலையில் தங்கினர். அங்கே தனித்து வந்த தாடகையை முனிவன் சொற்படி இராமலக்குவர்கொன்றனர். அங்கிருந்து சென்று தன் குடிலையடைந்து முனிவன்வேள்வி தொடங்கினன்.

சுவாகு இளவரசனான மாரீசனோடு சென்று வேள்வியைத்தடுத்தான். இராமன் சுவாகுவைக் கொன்றான் .தன்னிலைமையுணர்ந்த மாரீசன் ஆங்கு நின்றும் மீண்டனன். மூவரும் வேள்வி முடித்துத் தமிழகத்தை நீங்கினர்.

தூதரால் இதனையறிந்த இராவணன், விந்த நாட்டையாண்டுவந்த

தனது தங்கை காமவல்லிக்குத் துணையாகப் பெரும்படையைஅனுப்பினன். கரன் என்னும் படைத்தலைவன் அப்பெரும்படையைஆங்காங்கு அமைத்துக் காத்து வந்தனன். காமவல்லியின் காப்பில் விந்தநங்கை புலைவேள்வியற்றுப் பொலிந்தனள்.

வேள்வி முடித்துச் சென்ற மூவரும் மிதிலையை யடைந்து சனகன் விருந்தினராக இருந்தனர். முனிவர் கட்டளைப்படி இராமன் சீதையின் திருமணத்திற் கேதுவான வில்லை வளைத்தொடித்தனன்.சனகன் மகிழ்ந்து, தசரதன் முதலியோரை வரவழைத்துச் சீதையை இராமனுக்கும், ஊர்மிளையை இலக்குவனுக்கும், தன் தம்மி குசத்துவசன் மகளிரான மாளவியைப் பரதனுக்கும், சுதகீர்த்தியைச் சத்துருக்கனுக்கும் மணஞ்செய்து கொடுத்தனன். தசரதன் சனகனிடம் விடைபெற்று மக்கள் மருமக்களுடன் அயோத்தியை யடைந்தனன்.

தசரதன், இராமன் மீதுள்ள பற்றினால் பரதனுக்குரிய நாட்டைஇராமனுக்காக்க வெண்ணித் தந்திரமாகப் பரதனைச் சத்துருக்கனுடன் அவன் பாட்டனூருக் கனுப்பிவிட்டு இராமனை நாட்டு மக்களிடம் பழகச் செய்தனன். இவ்வாறு பன்னிரண்டாண்டுகள் சென்றன. தசரதன் அரசர்களையும் குடிமக்களையும் கலந்து இராமனுக்கு இளவரசுப் பட்டங்கட்ட முடிவு செய்தனன். இதையறிந்தகைகேசியின் தோழியான மந்தரை என்பாள் அரசன் சூழ்ச்சியைக் கைகேசியிடம் கூறி முடிசூட்டு தலைத் தடுக்கும்படி வேண்டினாள்.கைகேசி தசரதனிடம் முன்னர்ச்சம்பரனை வென்றதற்காகக்கொடுத்த இரு வரங்களில் ஒன்றால் பரதன் நாடாளவும் மற்றொன்றால். இராமன் பதினான்காண்டுகாடாளவும் செய்ய வேண்டும் எனக்கேட்டாள். தசரதன் சூழ்ச்சிபலிக்கவில்லை. இராமன், சீதை, இலக்குவன் மூவரும் தேரேறிக்காடுசென்றனர்.

சென்றவர், குகனென்னும் தோழனால் கங்கையைக் கடந்து வழிநெடுக ஆரிய முனிவர் வரவேற்று

வழியனுப்பச் சென்று சித்திர கூடனார் மலையை யடைந்திருந்தனர் தேரோட்டி வந்த சுமந்திரன் சென்று கூறவே தசரதன் இராமன் பிரிவால் உயிர் விட்டனன். பரதன் செய்தி கேட்டு வந்து தந்தையின் உடலை அடக்கம் செய்து சேனை சூழச்சித்திரகூடத்தை யடைந்து இராமனை நாடாள வரும்படி வேண்டினான். இராமன் நாடு பரதனுக்குரிய தென்பதைக் கூற, பரதன் நான் அதை உனக்குத் தந்தனன் ஏற்றருள்க வென, இராமன் நான் பெற்றோர் சொற்படி பதினான்காண்டு கழித்து வருகிறேன். அது மட்டும் எனக்கீடாக நீ ஆள்வாயெனப் பரதன் இராமன் மிதியடியைப் பெற்று மீண்டு,நந்தியூர் என்னும் சிற்றூரில் தங்கி, மிதியடியை முடிபுனைந்தரியணை யிருத்தி அதை வணங்கி வந்தனன். சத்துருக்கன் ஆட்சி புரிந்து வந்தனன்.

சித்திர கூடத்தைவிட்டு இராமன் தமிழகத்தை யடைய ஆரியர் வரவேற்கச் சில நாளங்கிருந்து சரபங்கன் நிலையை யடைந்திருந்தனர். ஒரு நாள் முனிவர்கள் ஒன்று கூடி வந்து தமிழகத்தில் தாங்கள்தவவேள்வி செய்ய முடியாமல் கரன் தடுப்பதைக் கூறி அவனைக்கொன்று தங்களை வாழ்விக்கும்படி வேண்டினர். இராமன் அதற்கிசைந்து விடைபெற்றுச் சென்று முனிவர் இருக்கையில் தங்கித் தமிழ்கற்றும், வேள்வி செய்ய முனிவர்க் குதவியும், இரண்டகத் தமிழரை நட்பாக்கியும் பத்தாண்டினை அங்கே கழித்தனன். பின் அகத்தியன் நிலையையடைந்து அவனால் ஒரு வில்லும், இரு அம்புக்கூடுந்தரப்பெற்றுச் சென்று பஞ்சவடி என்னும் இடத்தில் தங்கி யிருந்தனர்.

இராமன் ஒரு நாள் தனித்துலாவிய காமவல்லியைக் கண்டு காமுற்று, அவள் அறிவுரையைக் கொள்ளாது கையைப் பிடித்திழுத்து வற்புறுத்தினான். அவள் திமிறிக்கொண்டு விரைந்து சென்றாள். இராமன் தன் தம்பியால் அத்தமிழரசியை மூக்கையும் . காதையும் முலைக்கண் களையும் அறுத்துக் கொன்று, முன்னேற்பாடில்லாதகரனையும் பொருதழித்தான்.

தூதரால் செய்தி யுணர்ந்த இராவணன் கொதித்தெழுந்து தேரேறி விந்தஞ் சென்று, காமவல்லி வளர்த்த மானைவிட்டு இராம லக்குவரைப்

பிரித்து அவரை வளைத்துக் கொள்ளும்படிவீரரை வைத்துச் சீதையை எடுத்து வந்தனன். சீதை புலம்ப,உன்னை உன் கணவன் வரின் நல்லறிவு புகட்டி அவனுடன்அனுப்புகிறேன் அஞ்சேல் எனத்தேற்றித் தன் தங்கையின் நிலையில் வைத்துப் போற்றி வந்தனன்.

மறவரால் வளைக்கப்பட்ட இராமலக்குவர் அவரை யோட்டிச்சென்று இலைக்குடிலில் சீதையைக் காணாது வருந்தித் தேரடிப்பாதையைப் பின்பற்றிச் சென்று ஒரு முனிவன் குடிலை யடைந்தனர்.அவன், சீதையை இராவணன் இலங்கை கொண்டு செல்வதையும்,வாலியால் துரத்தப்பட்டு மதங்கரிடமுள்ள சுக்கிரீவன் வரலாறுங்கூறியனுப்பச் சென்று மதங்கரைக் கண்டு நிகழ்ந்தது கூறினர். அங்கேஅனுமன் வர மதங்கர் அவர்களை அறிமுகப்படுத்தி அனுமனுடன் அனுப்பச் சென்று சுக்ரீவனைக் கண்டு வரவு கூறி உதவி நாடினர். அவன் என்அண்ணனைக் கொன்று எனக்கு அரசீந்தால்உனது மனைவியை மீட்க உதவுவேன் என்றான். இராமன் அதற்கிசைந்து வாலியுடன்பொரச்சொல்லி இருவரும் பொரும்போது மறை விலிருந்துஅம்பெய்து வாலியைக் கொன்று சுக்கிரீவனைக் கிட்கிந்தைக் கரசனாக்கி மதங்கர் நிலையை அடைந்திருந்தான்.

சீதையைப் பார்த்துவரத் தேவியோடு சென்ற இராவணன், இராமன் வாலியைக் கொன்று சுக்கிரீவன் படையொடு இலங்கையை முற்ற வரப்போவதாகக் கூறிச் சென்றனன். சீதை,தன்னால் இலங்கை போர்க்கள மாவதை எண்ணிப் புலம்பிக்கொண்டிருக்கையில் பீடணன் மகள் திரிசடை அங்கு வரவே சீதை அவளிடம் தன் கணவன் படைபெடுத்து வர விருப்பதைக் கூறித் தன்னால் இலங்கை போர்க்களமாகுமே என வருந்த, திரிசடை இராவணன் திறமை கூறி, இராமனால் இலங்கையை முற்ற முடியாதெனத் தேற்ற, சீதை எனக்கு அச்சமாக இருக்கிறது, உன் தந்தையிடம் சொல்லி என்னை எப்படியாவது என் கணவனிடம் சேர்த்துப் போரில்லாமல் செய்வாயென வேண்டினாள். திரிசடை அவ்வாறே தன் தந்தையிடம் சென்று கூற, அவன் சரியெனக்கூறி யனுப்பிவிட்டுத் தானும் இராமனையடைந்து சுக்கிரீவன் போல் அரசனாக எண்ணி அதைத்தன் நண்பன் நீலனிடம்

கூறி ஆவன செய்யுமாறு எற்பாடு செய்திருந்தனன்

இராமன் சீதையைப் பார்த்துவரும்படி சுக்கிரீவனது அமைச்சனான அனுமனை அனுப்பினன். அனுமன் இலங்கை சென்று ஓர் ஆரியனால் பீடணன் நிலைமையறிந்து சென்று பீடணன் மனையை யடைந்தான். பீடணன் அனுமனை வரவேற்றுத் தனது எண்ணத்தைக் கூறவே, அனுமன் அவ்வாறே செய்வதாக உறுதி கூறித் திரிசடையுடன் சென்று சீதையைத் தனியாக அழைத்து வந்து இராமன் படையொடுவந்து இலங்கையை யழித்து உன்னை மீட்டுச் செல்வா னெனவே, சீதை திடுக்கிட்டு இராவணன் பெருமை கூறித் தனியாக வரும்படி கூறுமெனக் கூறித் திரிசடையுடன் சென்றனள்.

அனுமன் வெளிச் செல்லும்போது வாயிற் காவலர் பிடித்துக் கொண்டுபோய் இராவணனிடன் விட்டனர். இராவணன் அவன் வந்த வரலாற்றைக் கேட்டு, அயலானோடு கூடி அரசைக் கொன்ற இரண்டகச் செயலைக் கண்டித்துக் கூறி, இராமனைத் தனியாக வந்து மன்னிப்புக்கேட்டு மனைவியை யழைத்தேகும்படி கூறெனக் கூறி யனுப்பினன்.

அனுமன் சென்று கூறவே, இராமன் பணிவை மறுத்துப் படை யுடன் சென்று இலங்கைப்புறத்துத் தங்கினான். ஒற்றரால் இதனை அறிந்த இராவணன், இராமனிடம் அதிகாயனைத் தூது விட்டான். இராமன் பணிவை மறுத்துப் போருக்குத் தயாரெனக் கூறிவிட்டனன். இராவணன் பேரவை கூட்டிப் போரில் இராமனை முறியடிப்பதே ஏற்றதென முடிவு கண்டனன். அப்போது பீடணனெழுந்து இராமன் திறமைகூறி, " சீதையை விட்டு உறவு கொள்ளவோம். மீளானாயின் விந்த நாட்டை விட்டேனும் பகையின்றி வாழ்வோ " மென்றனன். இராவணன் வெகுண்டு அவையைவிட்டோடும்படி கூற, அவன் அவ்வாறே சென்றனன்.

அவையை விட்டுச் சென்ற பீடணன், நீலன், வேலன், குயிலன், நேரி என்னும் படைத்தலைவருடன் சென்று அடைக் கலமென இராமன் காலில் விழுந்தான். அவன் புகல் தந்து

அப்போதே இலங்கை யரசனாக அவனுக்கு முடிசூட்டினன். பீடணன் இலங்கையை எளிதில் வெல்வதற்கான உளவை யெல்லாம் இராமனுக்கு உரைத்தனன்.

இதையறிந்த இராவணன் கடுஞ்சினங்கொண்டு போர்க்குத் தயாராகும் படி படைத்தலைவருக்குக் கட்டளையிட்டான். தானைத் தலைவர் முரசறைவித்தனர். தமிழ் மறவர் போர்க்கோலம் பூண்டு திரண்டனர்.

பொழுது புலர்ந்ததும் பகைப்படை நகர்ப்புறத்து வந்து தங்கிற்று. இராவணன் கோட்டையைக் காப்பமைக்கும் படி கட்டளை யிட்டுப் பகைப்படை நிலைமை அறிந்து வர ஒற்றை ஏவினான். பீடணன் அவரைக் காட்டிக்கொடுத்தனன். இராமன் அவரைச் சிறையிட்டனன். இவ்வாறு பல முறை காட்டிக்கொடுத்தனன் அக்கடை மகன்.

ஆரியப்படை ஊரை முற்றியது. மதில் போரில் வடவர் படை தோற்றது. களங்கண்டு பொருதனர். பின் இரண்டு நாள் இரவும் பகலும் ஓயாது போர் நடந்தது. இரு படையிலும் பலர் மாண்டனர்.

கும்பகன்னனுக்கும் இராமனுக்கும் கடும்போர் நடந்தது. இராமன் சமயம் பார்த்து முறையின்றிக் கைகால்களை யறுத்துக் கொன்றான். செய்தி கேட்ட இராவணன் கதறிப் புலம்பச் சேயோன் தேற்றிச் சென்று போர்க்களம் புக்கான்.


ஓரிடத்தில் கும்பலாக இருந்த ஆரியப்படையொடு தனியாகப் பொருது கொண்டிருந்தான் சேயோன். பீடணன் இராமனிடம் கூறி இதுவே அவனைக் கொல்ல ஏற்ற கால மென்றான். இராமனேவ, இலக்குவன், பீடணன், சுக்கிரீவன், அனுமன் முதலியோர் பெரும் படையுடன் சென்று வளைத்துப் பொருதனர். ஒருவன் பின்னாலிருந்து தேர்ப்பாகனைக் கொன்றான். பீடணன் குதிரைகளைக் கொன்றான். முடிவில் சேயோன் அம்புக்கூடு வறிது பட்டது. வாள் முதலிய கொண்டு பொருதான். அந்தோ! முடிவில் இலக்குவன் ஓரம்பை யேவித் தமிழர்குலக் கொழுந்தைத் தலையை யறுத்துக் கொன்றனன்.

அது கேட்ட இலங்கை ஓவென்றலறியது இராவணன் பல வாறு புலம்பிச் சீறியெழுந்து களஞ் சென்றான். இராவணனுக்கும் இராமனுக்கும் கடும்போர் நடந்தது. இலக்குவன் முதலிய அனைவரும் சூழ்ந்து பொருதனர். இராமன் தேர்ப்பாகனைக் கொன்றான். பீடணன் குதிரைகளைக் கொன்றான். இராவணன் வெகுண்டு அப் பாவி மேல் எறிய வாளை ஓங்கினான். இலக்குவன் குறுக்கே வந்து அம்பெய்யவே அவ்வாளை அவன் மேல் எறிந்தான்.அப்போது, அதாவது இலக்குவன் பக்கம் வாளெறியத் திரும்பும்போது, , மாதலி என்பான் ஓர் கூரிய அம்பை இராமனிடம்கொடுத்து, வாள் எறிந்து திரும்புமுன் கொல்க எனவே, முறைகெட்ட இராமன் அவ்வாறே தமிழகம் புலம்பத் தலையறுத்து வீழ்த்தினான். தமிழர் மாபெருந் தலைவன் உடல் மண்ணில்புரண்டது. அடுகளம் அழுகளமாயது. வண்டார்குழலி உடனுயிர்விட்டனள். யாவரையும் அடக்கம் செய்து காடு வாழ்த்திச் சென்றனர் தமிழர். இராமன் பீடணனுடன் கோயில் புக்கிருந்து,பீடணனால் சீதை அழைத்துவரப்பட, அவள் இராவணன் பெருமைகூறி வருந்தினாள். இராமன் அதைப் பொருட்படுத்திலன்.

இராமன் பீடணனோடு, தமிழகத்தில் தமிழரைப் போல எல்லாஉரிமையையும் எய்தி ஆரியர் நிலையாய் இருந்து வாழ்தற்கேற்ற ஒப்பந்தஞ் செய்து கொண்டு, பீடணனை இலங்கை யரசனாக்கிப்பெரும் படையைக் காப்பாக வைத்துவிட்டு அயோத்தி சென்றனன்.சுக்கிரீவன் கிட்கிந்தை சென்றனன்.

இராமன் அயோத்தி சென்று முடிபுனைந்து அரசு புரிந்துவருகையில், ஓர் ஆரியன் தனது மாண்ட பிள்ளையுடன் அரண்மனையையடைந்து," உனது நாட்டில் ஒரு சூத்திரன் – தமிழன்தவஞ்செய்கிறான். அதனால், எனது பிள்ளை இறந்தது" எனக்கூற, அதைக் கேட்ட இராமன் ஆரியர் வழிகாட்ட அங்குச் சென்று, பீடணனது ஆரிய அடிமையாட்சியை வெறுத்து வாள் வடக்கிருந்த உயிர் விடற்கு உண்ணாநோன்பிருந்த சம்புகன் என்னும் தமிழ் மகனை வெட்டி வீழ்த்தி நகருற்றான். ஆரியர் செத்த பிள்ளைபிழைத்த தெனக் கூறிவிட்டனர்.

ஒருநாள் ஓர் ஒற்றன் இராமனிடம் வந்து 'அயலான் மனையில் பலமாதம் இருந்தவளை அழைத்து வந்து வைத்துக்கொண்டான் என ஊரார் பழிக்கின்றனர் எனக் கூறினான். இராமன் அதைச்சீதையிடம் கூறிவருந்தினான். சீதை ஊர் பழிப்பதற்கு அஞ்சக்கூடாது எனக் கணவனைத் தேற்றினாள். எனினும் இராமன் மனம் ஒப்பாது இலக்குவனால் சீதையைக் காட்டில் கொண்டு போய் விட்டு விட்டுநாடாண்டு வந்தனன்.



தென்னிலங்கைப் பெருங்குடியின்

வழிகாட்டி

தன்மானச் சுடர்விளக்கு

தமிழர் தலைவன்

எந்நாளும் புகழேட்டில்

வாழுகின்ற இராவணன்காண்

– கலைஞர்.

தமிழன் கம்ப்யூட்டர் ஆப்செட் பிரிண்டர்ஸ். நாமக்கல்.